

# வீட்டு வளாகத்தில்

# கோழிகளை வளர்ப்பதா?

## உரிமையாளர் மீது நடவடிக்கை

கோலாலம்பூர், ஜூலை 12-

தலைநகர் கோலாலம்பூரில் உள்ள தரை வீட்டு உரிமையாளர் ஒருவர் வீட்டிற்கு வெளியே உயிருள்ள கோழிகளை அடைத்து வைத்து வளர்த்து வந்தது கோலாலம்பூர் மாநகர் மன்ற அதிகாரிகள் மேற்கொண்ட அதிரடிச் சோதனையில் அம்பலமானது.

அந்த நபர் வீட்டின் பின்புறம் சட்டத்திற்குப் புறம்பாக கோழிக் கொட்டகைகளை அமைத்து கோழிக்கூண்டுகளையும் அங்கு வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட அந்த வீடும் மிகவும் அசுத்தமாக இருந்தது. கடுமையான துர்நாற்றம் வீசியது. இதனால் அண்டை வீட்டுக்காரர்கள் அவதிப்பட்டதாக கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அறிக்கை தெரிவித்தது.

அந்த நபர் நடைபாதையில் கோழிக்கூண்டுகளை வைத்திருந்தார். இது சட்டவிதிமுறைகளை மீறிய செயலாகும். ஏற்கெனவே 1976ஆம் ஆண்டு ஊராட்சி மன்றச் சட்டம் 82ஆவது ஷரத்து கீழ் அவருக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டிருந்தது. ஜூலை முதல் தேதி இந்த நோட்டீஸ் வழங்கப்பட்ட நிலையில் அவர் தொடர்ந்து சட்டவிதிமுறைகளை மீறி இருந்தார். அந்த இடத்தில் கோழிகளைத் தொடர்ந்து வளர்த்து வந்தது தெரிய வந்தது.

அந்த நபரின் வீட்டிலிருந்து 37 கோழிகள் அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டன. நோட்டீசைக் கடைப்பிடிக்கத் தவறிய குற்றத்திற்காக அவருக்குச் சம்மன் வெளியிடப்பட்டது. சேவல் கோழிகளை வீட்டு வளாகத்தில் வளர்த்ததற்காகவும் சம்மன் கொடுக்கப்பட்டது. கோலாலம்பூர் கூட்டரசுப் பிரதேசத்தில் உள்ள வீடமைப்புப் பகுதிகளில் வசிப்போர் கோழிக்கூண்டுகளை அமைக்கக்கூடாது. கோழிகளையோ சேவல்களையோ வளர்க்கக்கூடாது என்று டிபிகேஎல் தடை விதித்திருக்கிறது.

சட்டவிதிமுறைகள் முறையாகக் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்ய கண்காணிப்பு நடவடிக்கைகளும் கடுமையான நடவடிக்கைகளும் தொடரும் என்று டிபிகேஎல் நினைவுறுத்தியது.